DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 19/2021**

அ.சா.2

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | சுந்தரபாண்டியன் | Caste: | |
| Father's/Husband Name: | சண்முகம் | Calling: | |
| Village: | சூடியூர் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 62 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 06.02.2026

( 3, 5 எதிரிகள் ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. 1,2,4 ஆவது எதிரிகள் ஆஜர்.)

**<u>முதன்மை விசாரணை</u>**

நான் இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தாலுகா சூடியுரில் வசித்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். சா.சா.3 ராஜா, 4 செல்வம் ஆகியோர்களை தெரியாது. எதிரிகளை தெரியும், உள்ளூர்க்காரர்கள். அ.சா.1 சாத்தன் என்ன சாதியை சேர்ந்தவர் என்றால் தெரியாது. எதிரிகள் பிற்படுத்தப்பட்ட அகமுடையார் வகுப்பை சேர்ந்தவர்கள். அ.சா.1 சாத்தன் எதிரிகள் மீது கொடுத்த புகார் சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. அது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலிஸ் விசாரணையில் கடந்த 04.03.2021ம்தேதி காலை 11.30 மணியளவில் நான் வேலை பார்த்த வினோத் குமார் என்பவருக்கு சொந்தமான மண்குவாரியில் இருந்தபோது என்னோடு, வாட்ச்மேன் மற்றும் Hitachi ஆப்ரேட்டருக்கு சாப்பாடு கொடுக்க சென்றபோது TN 65 AH 0786 என்ற எண்கொண்ட சிவப்பு நிறமுள்ள Swift காரில் சூடியுர் கிராத்தில் வசிக்கும் 1ம் எதிரி துரைப்பாண்டியன், 3ம் எதிரி ரங்கநாயகி வந்தார்கள் என்றும், அதனை தொடர்ந்து 2ம் எதிரி TN 65 5655 என்ற சிவப்பு நிற எம்80 மொபெட்டில் வந்தார் என்றும், வாட்ச்மேனாக வேலை பார்த்த சாத்தன் என்பவரிடம் 1ம் எதிரி துரைபாண்டியன் சென்று எங்கடா உன் முதலாளி என்று அசிங்கமான வார்த்தைகளால்பேசி வெளியூரிலிருந்து வந்து இங்கு குவாரி நடத்திவிட்டு போயிருவங்களா, உங்கள் எல்லோரையும் கொல்லாமல்விடமாட்டேன் தாயோலிகளா என அசிங்கமாக திட்டி மிரட்டினார் என்றும், அப்போது சாத்தன் நீங்க ஓனர் இல்லாத நேரத்தில் இங்கு ஏன் வந்தீங்க வெளியில் போங்க என்று கூறினார் என்றும், அப்போது 1ம் எதிரி ஏன்டா நத்தை பொறுக்கி திங்கிற ஈனதேவுடியா பள்ளத்தேவுடியா மகனே, என்னையவா வெளியில் போகச்சொல்கிறாய் என்று பேசிக்கொண்டு தன் காலில் அணிந்திருந்த செருப்பை கழற்றி சாத்தன் முகத்தில் அடித்தார் என்றும், 3ம் எதிரி ஜோதிரங்கநாயகி இந்த பள்ளப்பயல அடிச்சு கொண்டாத்தான் மத்தவங்களுக்கு பயம்வரும் என்று சொன்னார் என்றும், அப்போது 2ம் எதிரி சாத்தனை ஓங்கி காலால் எட்டிமிதித்தார் என்றும், சாத்தன் தடுமாறி

கீழே விழுந்தார் என்றும், அப்போது நானும், Hitachi ஆப்ரேட்டர் ராஜா, கே.வலசையை சேர்ந்த செல்வம் ஆகியோர்கள் சத்தம்போட்டு தடுத்தோம் என்றும், அப்போது ராஜா தனது மொபைலால் போட்டோ எடுத்ததை பார்த்தவுடன் 1ம் எதிரி துரைப்பாண்டி சாத்தனைப்பார்த்து இப்போது பொலச்சுக்கிட்ட உன்ன கொல்லாமல்விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு 3 எதிரிகளும் வண்டியை எடுத்து கிளம்பிவிட்டனர் என்றும் பின்பு சாத்தன் 07.03.2021ம் தேதி அரசு பரமக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது பார்த்திபனூர் காவல் நிலைய ஆய்வாளர் வந்து விசாரித்தபோது புகார் மனு கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றும், கடந்த 07.03.2021ம் தேதி டிஎஸ்பி விசாரிக்கும்போது கூறிவிட்டு தற்போது உடன் இருந்த சாட்சிகளை தெரியாது என்றும், சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்றும், போலிசார் விசாரிக்கவில்லை என்றும் எதிரிகள் உள்ளுர்க்காரர்கள் என்பதால் அவர்களை காப்பற்றவேண்டி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இல்லை

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.06 17:28:25 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)